

தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா அவர்களின் மகள் வழிப் பேத்தி ஹாஜிமா எம்.சமீனா சப்ரியத் – எஸ். ஹனீஃப்கான் அவர்களின் திருமணம் கடந்த 05.07.2026 அன்று தி.மு.கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதனையொட்டி நேற்று (03.08.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை மணமக்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### ‘ஜன் சுராஜ்’ கட்சியின் நிறுவனர்

# பிரசாந்த் கிஷோர் பீகார் இடைத்தேர்தலில் வெற்றி!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



சென்னை, ஆக.4–

பீகார் இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற ‘ஜன் சுராஜ்’ கட்சியின் நிறுவனர் பிரசாந்த் கிஷோரைப் பாராட்டி நேற்று (03–07–2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:–

**பங்கிபூர் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் சிறப்பான வெற்றி பெற்று, ஜன் சுராஜ் கட்சியின் முதல் தேர்தல் வெற்றியைப் பதிவு செய்துள்ள அக்கட்சியின் நிறுவனர் பிரசாந்த் கிஷோர் அவர்களுக்குப் பாராட்டுகள்.**

**பங்கிபூர் தொகுதி மக்களுக்கும் பிகார் மாநிலத்துக்கும் தொண்டாற்றுவதில் வெற்றி–யடைய அவருக்கு என் வாழ்த்துகளைத் தெரி–வித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவரின் எண்ணப்படி சென்னை கிழக்கு மாவட்டத்தில் எழுச்சிமிகு நிகழ்ச்சிகள்!

# ஆக.7 கலைஞர் நினைவுநாள்: நல உதவிகள் வழங்கி சிறப்புச் செய்வோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் – மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ உரை!



சென்னை,ஆக.4-

**சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள்,பகுதி கழகச் செயலாளர்கள்,வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் 3-8-2026 திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் சென்னை, வில்லிவாக்கம்,எம்.டி.எச் சாலையில் உள்ள டி.வி.கே திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.**

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன். அ. வெற்றி அழகன். ஜோசப் சாமுவேல். ப. ரங்கநாதன். கே எஸ் ரவிச்சந்திரன். கார்த்திக் மோகன். பி.கே.மூர்த்தி.ஏ.பி.பூர்ணிமா என். பி.எம்.ஷேக் அப்துல்லா. வே. உமா காந்தன்.கே எஸ் எம். நாதன். எம் விஜயகுமார். கே சந்துரு. சி. மகேஷ் குமார்

மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், ஜி.எம்.தேவன், இசட் ஆசாத் பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பி. ஜெயின், வே வாசு, ஜசிலப். முரளிதரன். எ.நாகராஜன். டீஎஸ்பி ராஜகோபால், எம்டி.ஆர். நாகராஜ். செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணனு, சொ. வேலு, வி சுதாகர், எஸ் ராஜசேகர், எஸ் முரளி. பொதுக்குழு உறுப்பினர்கள் டி.வி. செம்மொழி. சாவித்திரி வீரராகன். கோ மணி, எம் இப்ராஹிம் கனி, இரா கலைச்செல்வி, சரிதா மகேஷ் குமார். ரமேஷ் (எ) நீலகண்டன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய். ஜெ.பாலமுருகன். ஜி ஜே பிரபு. கே.வினோத். பா.ஜெகதீஷ். நா ரஞ்சித் விஜயாயன். பி. ஸ்ரீராமுலு.எல் பி எஃப் மோகன், ஜி தாமோதரன், நா துலுக்கானம், பி விஜயகுமார். பா பிரதீப் குமார். எல் சம்பத்குமார். கு கிருஷ்ணமூர்த்தி. ஆர் எஸ் சித்திக். இரா வீரமணி. ம.அசோக் குமார் எம் விநாயகம். சுதா தீனதயாளன் .ராஜேஸ்வரி ஸ்ரீதர். ஜி சாந்தகுமாரி, மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழகச் செயலாளர் ஆர்.தீனதயாளன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு பேசியதாவது:-

தேர்தல் முடிந்த பிறகு வாக்கு எண்ணிக்கை முன்பாக ஒருங்கிணைந்த வட்ட பகுதி கழக செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தினோம். தேர்தல் முடிவுக்கு பிறகு 90 நாட்களுக்கு பிறகு ஒன்று கூடி இருக்கும், கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம். Gen z இளைஞர்கள் புதிதாக களத்திற்கு வந்தாலும் களத்திற்கு உறுதியாக இருந்து செயல்படுகிறார்கள் என்றும் வீரத்தோடு களத்தில் நின்று பணியாற்றும் gen z நிர்வாகிகளை வரவேற்று பேசினார்.

**கலைஞருக்கு நினைவஞ்சலி!**

முதலமைச்சர், தலைவர் கலைஞர் மறைவிற்குப் பிறகு , தொடர்ந்து நடைபெறும் மௌன ஊர்வலத்தை எழுச்சியோடு நடத்தி வருகிறோம். ஆட்சியில் இல்லாத போதும் கூட, கலைஞர் நினைவிடத்தில் நினைவஞ்சலி செலுத்த சென்னை கிழக்கு மாவட்டம் உறுதுணையாக இருந்தது.

காவல்துறை முட்டுக்கட்டை போடும் என்று எண்ணி 10 நாட்களுக்கு முன்பே வழக்கறிஞர் மூலமாக காவல்துறையிடம் அனுமதி கேட்டோம்.

நேற்று காலை, தலைவரை சந்திக்கும்போது எப்போதும் போல் இந்த ஊர்வலத்தை நடத்த வேண்டும் என்று அன்பு கட்டளையிட்டார். வரும் 7 ஆம் தேதி அன்று எல்லோரும் ஒன்று கூடி காட்டுவோம்.

50 ஆண்டுகள் தமிழ்நாட்டில் ஆட்சி செய்து இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர் கலைஞருக்கு நாம் செலுத்தும் மரியாதையாக அது இருக்கும். ஒவ்வொரு தொண்டரும் அதற்கான பொறுப்பை எடுத்துக்கொண்டு அதில் பங்கேற்க வேண்டும்.

**அனைவரையும் அரவணைத்து நிகழ்ச்சி!**

அந்த ஆண்டு மகளிர்கள் பெரிய அளவில் வந்திருந்தனர். கடந்தாண்டு ஆட்சியில் இருந்தால் அனைவரையும் அரவணைத்து ஒன்றிணைத்தோம். இப்போது ஆட்சியில் இல்லாததால் வரும் கூட்டம் சிதறி விடக்கூடாது. நம் இயக்கம் அருகம்புல் அல்ல. நூறாண்டு தழைத்த ஆலமரம் என்பதை நிரூபித்து காட்ட வேண்டும்.

தலைவர் பிறந்தநாளில், ஒட்டு மொத்த தமிழ்நாட்டில் ஏதோ நிகழ்ச்சிகள் நடத்தினோம் என்ற சூழல் இருந்தாலும், கிழக்கு மாவட்டத்தில் 20 நிகழ்ச்சிகள் நடத்த உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி.

இந்த இயக்கம் எப்போதும் சிறுமைப்படுத்த முடியாத இயக்கம். எப்போதெல்லாம் தோல்வி நமக்கு வருகிறதோ விரைவில் வெற்றி கிட்டும் என்ற உழைக்கும் இயக்கம்.

**தலைமை நினைப்பதை சிறப்பாக நிறைவேற்றிக் காட்டும் கிழக்கு மாவட்டம்!**

கிழக்கு மாவட்ட தி.மு.க.வைப் பொருத்தவரை தலைமை என்ன நினைக்கிறதோ தலைமை இதை நோக்கி செல்ல சொல்கிறதோ அதை நோக்கி உறுதியாக செல்லும் தொண்டர்களின் கூட்டமாக இருக்கும்.

இயக்கம் சோதனை காலத்தில் இருக்கும் போது அதற்கு விலை எதுவாக இருந்தாலும் தருவதற்கு தயாராக இருப்போம் என்ற அறைகூவலோடு செயல்படுவோம். எப்போதும் உதயசூரியன் உதிக்க தயாராக இருப்போம்.

நம் தலைவர் தளபதியை மீண்டும் முதலமைச்சராக பார்ப்பதற்கான அனைத்து செயல்களையும் மேற்கொள்வோம்.

இவ்வாறு பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசினார்.

**தீர்மானங்கள்!**

அதை தொடர்ந்து, இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

**தீர்மானம்.1.**

தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்ட மாநிலத்துடன் சட்டரீதியாக போராட வேண்டுமே தவிர உபரிநீரை வெளியேற்றும் வடிகால் பகுதியாக தமிழ்நாட்டைப் பார்க்கும் கர்நாடகா அரசிடம் பேச்சுவார்த்தை நடத்துவது பயனளிக்காது எனக்கூறி..

இவ்விவகாரத்தில் முதலமைச்சர் தனி ஆவர்த்தனம் செய்யாமல் கர்நாடகா அரசு எப்படி அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி அவர்களது ஒற்றுமையை வெளிப்படுத்தினார்களோ அதே போல காவிரியின் நதிநீர் பிரச்சினையில் தமிழ்நாட்டின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டுவது எப்போது என்ற கேள்விக்கணையை எழுப்பிய தலைவருடைய கூற்றை வழிமொழிந்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**த.வெ.க. அரசைக் கண்டித்து தஞ்சையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்! உதயநிதி ஸ்டாலினுக்கு பாராட்டு!**

**தீர்மானம்.2.**

பயிர் கடன் தள்ளுபடியில் மோசடிமேகதாது பிரச்சினையை கைகட்டி வேடிக்கை பார்ப்பது மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12 அன்று தண்ணீர் திறக்காதது காவிரி பிரச்சினையில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட மறுப்பது கர்நாடகா முதல்வரின் சந்திக்க போவதாக Unofficial தகவல்களை உலவ விட்டு ஆழம் பார்ப்பது.. இப்படி தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் த.வெ.க அரசை கண்டித்து கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தஞ்சை மாநகரில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை தலைமயேற்று நடத்திய கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்.3.**

காலத்தின் ஏற்ற இறக்கங்களை கணக்கு கொள்ளாமல் உழைப்பு ஒன்றையே மனித கடமையாக வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளான ஆகஸ்ட் 7 அன்று சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வட்டங்கள் சார்பிலும் மற்றும் மாவட்ட அணிகள் சார்பிலும் அவரின் (கலைஞரின்) திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்துவதென்றும்..

**கலைஞரின் புகழ்போற்றுவோம்!**

என்றென்றைக்கும் தேவையான அவரின் ஆற்றலை அவர் நிகழ்த்திய சாதனைகளை உலகத்தார் உணரும் வகையில் கருத்தரங்கம், புகழரங்கம், பாராட்டரங்கம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கவும் முடி வெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**இரங்கல் தீர்மானம்.**

சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான ப. ரங்கநாதன் அவர்களின் மூத்த சகோதரர் ப.லோகநாதன் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி இரங்கல் தெரிவித்தும், அன்னாரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றியது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பி. கே.சேகர்பாபு,

தவெக ஆட்சி பொறுப்பேற்று 3 மாதங்கள் ஆகியும், காவிரி பிரச்சினை, மின்சார கட்டணம் உயர்வு என எத்தனையோ மக்கள் பிரச்சினை இருந்தாலும் அதை சரி செய்யாமல் திமுகவை குறை சொல்லி வருவது குறித்து பேசியவர், தவெக, வின் ஒரே அஜெண்டா திமுகவை குறை சொல்வது தான். அதை தவிர்த்து எந்த குற்றச்சாட்டையும் அவர்களால் சொல்ல முடியவில்லை.

தமிழ்நாட்டில் தட்டு தடுமாறி ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் விஜய், பார்வையிடும் ஒவ்வொரு திட்டமும், திராவிட மாடல் நாயகன் முன்னாள் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வடிவமைத்த திட்டங்கள் தான்.

திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை தான் விஜய் ,ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்.

ஒரே ஒரு திட்டத்தையாவது அடிக்கல் நாட்டும் அளவுக்கு கூட அவர் (முதலமைச்சர் விஜய்) செயல்பாடு அமையவில்லை. முழுவதும் தகுதி இழந்த தற்கொலைக் கூட்டமாக தான் இந்த ஆட்சி திகழ்கிறது.

தனிமையில் இருப்பது யார் என்பதை உலகமே நன்கு அறியும். குடும்பத்தோடு இருப்பவர் எங்கள் தலைவர் தளபதி. பிள்ளைகள் மனைவி இல்லாமல் யார் தனிமையில் இருக்கிறார் என்பதை நாங்கள் சொல்லி நாடு அறிந்து கொள்ளும் நிலையில் இல்லை.

எங்கள் முதல்வர் ஆலமரம். அருகம்புல் (தவெக) ஆலமரத்தை பழிக்கிறது.

காவிரி பிரச்சனையில் கூட அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட மாட்டேன். நான் தனி மனிதனாக அவர் தனம் செய்வேன் என்று கர்நாடகாவுக்கு செல்வேன் என்று அறிவித்த முதலமைச்சரை, கர்நாடகாவும் ஏற்றுக்கொள்ளவில்லை இங்கு இருக்கும் எந்த கட்சியும் ஏற்றுக் கொள்ளவில்லை.

*தனிமைப்படுத்தப்பட்டவர் யார் என்பதை மக்கள் முன் கேள்வியாக வைப்போம்?*

எங்கள் முதல்வர் மக்களின் தலைவன். 4 ஆம் தேதி வெற்றி வாய்ப்பை இழந்து, 5 ஆம் தேதி நன்றி சொல்ல வந்தபோது மக்களின் கண்ணீர் கடலில் மிதந்து வந்த தலைவன் எங்கள் தளபதி.

ஆட்சிக்கு வந்ததும் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று தற்குறி போல் எங்கள் அரசியல் அனுபவம் இல்லாமல், எங்கள் தலைவர் மிசா கொடுமையை அனுபவித்த போது, இந்த மண்ணிலே ஜீவிக்காத ஒரு தற்குறி அமைச்சர் கூட்டத்தை மக்கள் உற்று நோக்கி பார்க்கிறார்கள்.

ஜனநாயகத்தை காக்கும் முதல்வராக எங்கள் முதல்வர் தளபதி இருந்தார். ஜனநாயகன் படத்தை பார்த்து கண்ணீர் சிந்தும் அமைச்சர்கள் அவர் ஆட்சியில் இல்லை. மக்களின் ஆட்சி மக்களின் முதல்வர் என்பது அடுத்து எப்போது தேர்தல் வந்தாலும் மக்கள் நிரூபி ப்பார்கள்.

திமுக ஆட்சியில் இந்து சமய அறநிலைய துறையில் நிறைய ஊழல் நடந்திருக்கிறது. அதை வெள்ளை அறிக்கையாக வெளியிடுவது குறித்து அமைச்சர் ரமேஷ் பேசியது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த சேகர் பாபு,

எப்போதெல்லாம் திமுக ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் ஆன்மீகத்திற்கு எதிரான இயக்கம் என்று பெயர் பெயர் சூட்டுவார்கள். ஆனால் ஆன்மீகத்திற்கு எதிரான இயக்கம் என்ற பிம்பத்தை அடித்து நொறுக்கியவர் நம் முதல்வர் திராவிட மாடல் நாயகன் தளபதி ஸ்டாலின்.

அவர் காலத்தில் தான் 4700 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடந்தது.

ராஜராஜ சோழனுக்குப் பிறகு அதிக குடமுழுக்குகளைக் கண்ட மாமன்னன் எங்கள் தளபதி மு.க ஸ்டாலின்

அவர் காலத்தில்தான் 8,700 கோடிக்கு மேலாக நிலங்களை மீட்டவர் எங்கள் முதல்வர். திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை கொண்டுவந்து ஆண்டுக்கு 3.5 கோடி பேருக்கு இறைப் பசியோடு வயிற்றுப் பசியையும் தீர்த்தவர் எங்கள் முதல்வர்.

வெள்ளை அறிக்கையோ, கருப்பு அறிக்கையோ , சிகப்பு அறிக்கையோ, மஞ்சள் அறிக்கையோ வெளியிடட்டும். சட்டமன்றத்தில் அதை எதிர்கொள்ள இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் என்ற முறையில் , தளபதியின் ஏவுகணையாக அதற்கு பதில் கூறுவேன்.

சட்டமன்ற கூட்டத்தொடரில், அறநிலையத்துறை மீதான விவாதத்தின் போது, எத்தனை கேள்விகள் வந்தாலும் அப்பழுக்கற்ற தூய்மையான நீரை போன்று தூய்மையான ஆட்சி நடந்தது திமுக ஆட்சி என்பதை அவர்கள் கேள்வி கேட்கும் போது எங்கள் பதில்கள் அதற்கு சான்றாக அமையும்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு கூறினார்.



பாளையங்கோட்டை சிறையிலுள்ள விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயனை – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், கழக நிர்வாகிகளுடன் சென்று சந்தித்து அவரது உடல்நலம் குறித்துக் கேட்டறிந்தார். ”நீதிமன்றத்தால் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ள நிலையில், அவர் விரைவில் விடுதலையாகி கழகப் பணிகளையும் மக்கள் பணிகளையும் தொடர விழைகிறேன். த.வெ.க அரசின் அடக்குமுறைகளுக்கு தி.மு.கழகம் ஒருபோதும் அடிபணியாது”. என கனிமொழி கருணாநிதி அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

### ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக

# அன்னைத் தமிழ்மண் காக்கப் போராடிய மாவீரர் தீரன் சின்னமலையின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!



சென்னை, ஆக 4-

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக அன்னைத்தமிழ் மண் காக்க போராடிய மாவீரர் தீரன் சின்னமலையின் புகழ் என்றும் நிலைத் திருக்கும் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது சமூக வலை தளப்பதிவு வருமாறு:

**விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள் இன்று!**

**ஆங்கிலேயே ஆதிக்கத்துக்கு எதிராக அன்னைத்தமிழ் மண் காக்கப் போராடிய மாவீரர் தீரன் சின்னமலையின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.**

**‘சென்னிமலைக்கும் - சிவன் மலைக்கும் இடையே ஒரு சின்னமலை’ என்று வீர முழக்கமிட்ட தீரன் சின்னமலையின் தியாகத்தையும் - வீரத்தையும் போற்றுவோம்!**

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# நாக்பூரில் தமிழ்நாடு விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்கு கடும் கண்டனம்!

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!



சென்னை, ஆக.4-

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

மேகதாது அணை கட்டுமானத்திற்குக் கண்டனம் தெரிவித்து டெல்லியில் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகள் மராட்டிய மாநிலம் நாக்பூரில் அம்மாநில காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட் டுள்ளனர். ரயிலில் பயணம் செய்த விவசாயிகளை நடுவழியில் இறங்கச் செய்து திருப்பிச் செல்லுமாறு கட்டாயப்படுத்தி இருக்கின்றனர்.

தங்களது வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் நோக்கில் ஜனநாயக ரீதியில் போராடுவதற்காக சென்ற தமிழ்நாட்டு விவசாயிகளை மராட்டிய மாநில பா.ஜ.க. அரசின் காவல்துறை தடுத்து நிறுத்தி இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

ஒன்றிய அரசின் நீர்வளத் துறையின் செயல்பாடுகள் தொடர்ச்சியாக கர்நாடக அரசுக்கு சாதகமாக இருந்து வரும் நிலையில் தங்களது உரிமைகளை நிலைநாட்ட போராட்டத்திற்கு செல்லும் நிலைக்கு தமிழ்நாட்டின் விவசாயி கள் தள்ளப்பட்டனர். அவர்களின் போராட்ட உணர்வு என்பது இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமையின் அடிப்படையானது.

விவசாயிகளின் உரிமை போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது கடும் கண்டனத்துக்குரியது.

தமிழ்நாட்டின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்படுவதை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்நாடு அரசு மராட்டிய மாநில அரசிடம் இது குறித்து விளக்கம் கேட்க வேண்டும். காவேரி மேகதாது பிரச்சனையில் தமிழ் நாட்டின் உரிமையை நிலைநாட்ட அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



பொன்னேரியில் ‘திராவிட வட்டம்’ என்ற தலைப்பில் மாணவர்கள், இளைஞர்கள் சந்திப்பின் கலந்துரையாடல் கூட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விக்னேஷ் உதயன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழக மாணவரணி – இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.